**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.21/2011**

**Prosecution Witness : 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அரங்கநாயகி | **Caste** | : |
| **Father's Name** | : ரெங்கசாமி | **Calling** | : காவல் ஆய்வாளர் அவனியாபுரம் குற்றப்பிரிவு |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : மதுரை | **Age** | : 51/2026 |
| | | **Dated** | : 07.04.2026 |

**07.04.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 7 **திருமதி.அரங்கநாயகி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 5** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் மதுரை மாநகர் அவனியாபுரம் குற்றத்தடுப்பு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 08.10.2009ம் தேதி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது திண்டுக்கல் கனிமவளத்துறை உதவிஇயக்குநர் சொக்கலிங்கம் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண்.449/2009 சட்டப்பிரிவுகள் 279, 353, 379, 506(1) இதவ மற்றும் 3(a) தமிழ்நாடு சிறு கனிமவள விதி 1959 மற்றும் 4, 21(5)

கனிம மேம்பாட்டுச்சட்டப்பிரிவுடன் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 08.10.2009ம் தேதி மாலை 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வீராச்சாமி, ரவி முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு சாட்சிகள் சொக்கலிங்கம், தனித்துணை வட்டாட்சியர் மீனாட்சி சுந்தரம் , உதவி புவியியலாளர் ஜோதி மற்றும் மாணிக்கம் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். வாதி ஆஜர் செய்த மணலுடனான லாரியை கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR.No.208/2009 ஆக பதிவுசெய்தேன். விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவர எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் உரிய நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று கனம் நீதிமன்றத்தில் ஆஜரானதால் கைதுசெய்யவில்லை. வழக்கின் இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் இறப்பின் காரணமாக அவரது கையொப்பம் , கையெழுத்து எனக்கு பரிட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் சாட்சிகள் சொக்கலிங்கம், மீனாட்சி சுந்தரம், ஜோதி, மாணிக்கம் , வீராச்சாமி, ரவி ஆகியோரை விசாரிக்க என்னிடம் சொன்ன சங்கதிகளையே அவரிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை.பின்பு சார்பு ஆய்வாளர் தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 279, 353, 379, 506(1) இதவ மற்றும் 3(a) தமிழ்நாடு சிறு கனிமவள விதி 1959 மற்றும் 4, 21(5) கனிம மேம்பாட்டுச்சட்டப்பிரிவுடன் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரிகள் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.07 10:48:15 +0530

Judicial Magistrate No.II

Dindigul.